அந்த ரூ. 109-யை அதிகபட்சம் ரூ. 114 ஆகக் கொடுக்கப்பட வேண்டும் என்று ஷுகர் டைரக்டர் மூலமாகவும் மற்றும் விவசாயிகளின் பிரதிநிதிகள் மூலமாகவும் முயற்சி செய்யப்பட்டுள்ளதுடன், சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு எங்களைச் சந்தித்தது. அதன் மூலமாக அந்த ரூ. 109 என்பதை அதிகமாக்கி ரூ. 114 கொடுக்கப்படவேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். உடனடியாக அந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட இருக்கின்றன. மேலும் ரெக்கவரி குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன என்றும் கேட்டார்கள். அது கரும்பு விளைகின்ற நிலத்தின் தன்மையைப் பொறுத்தது, போடுகின்ற உரத்தைப் பொறுத்தது, நிலத்தைப் பொறுத்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தினை இன்னும் சிறிது நேரத்திற்கு நீட்டிக்கிறேன்.

(முற்பகல் 10.00)

*762 வினா—

திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மூங்கில்துறைப்பட்டு சர்க்கரை ஆலையில் கடந்த 77-ஆம் ஆண்டு வெட்டிய கரும்புக்கு விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கப்படாமல் இன்னும் ஏதேனும் நிலுவையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ): உயிரிழந்த கரும்பு உற்பத்தியாளர் ஒருவருக்கு மாத்திரம் ரூ. 1,826·29 கொடுக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. சட்டப்படியான வாரிசு கேட்டால் கொடுக்கப்படும்.

திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, உயிர் இழந்த ஒருவருடைய பாக்கியைத் தவிர வேறு எந்தவிதமான பாக்கியும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிகவும் நன்றி. சட்டமன்றத்தில் இதுபற்றி கேள்விகளை எழுப்பிய பிறகுதான் இப்படிப்பட்ட பாக்கிகளை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். மேலும், கட்டிங் ஆர்டர் கொடுக்கின்ற நேரத்திலும் பணம் கொடுப்பதில்லை. லாரிகளையும் உரிய நேரத்தில் வழங்குவதில்லை. தனியார் லாரிகளை வாடகைக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் ஒரு நாளைக்கு 250 ரூபாய் கேட்கிறார்கள். இவையெல்லாம் இல்லாமல் இருக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்கு பாக்கி எதுவும் இல்லை. தனியார் நிறுவனங்களைப்

1978 ஏப்ரல் 1]

பொறுத்தவரையில், ஒருசில ஆலைகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குள்ள பாக்கியை சரிசெய்யாமல் இருக்கின்றன. அவை களின் மீது மாநில அரசு நடவடிக்கை எடுத்து, உடனடியாக பாக்கி களை எல்லாம் கொடுத்துவிட வேண்டும் என்று உத்தரவும் பிறப் பித்து இருக்கிறது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் 'கட்டிங்' ஆர்டர் சரியான நேரத்தில் கொடுக்கப்படுவதில்லை என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். கட்டிங் ஆர்டர் கொடுப்பதைப் பொறுத்த விஷயத்தில் வரிசைப்படுத்தி கொடுத்துக்கொண்டிருக் கிறார்கள். அதிலுள்ள கணக்கையும் ஆலைகளில் அரவை செய்கின்ற தேதிகளையும் கணக்கில் எடுத்து 'கட்டிங் ஆர்டர்' கொடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர வேறு எங்காவது தாமதம் ஏற்படுவதாக இருந்தால்— குறிப்பாக இந்த இடங்களில் தாமதம் ஏற்படுகிறது என்பதை என்னிடம் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்வேன் என்பதை தெரிவித்துக்கொள்வதோடு, லாரிகள் அனுப்புகின்ற விஷயத்தில் தாமதம் ஏற்படுகிறது. வெளி யில், அதிகமான கட்டணம் கேட்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை யும் சொல்லியிருக்கிறார்கள். இதையும் அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கு தொடர் புடையதாகக் கேளுங்கள்....

திரு. ஜே. ஜேம்ஸ்: முந்தின கேள்வி தொடர்புடையதாக இருந்தது, இதில் கேள்விகள் கேட்க எனக்கு இடம் கொடுக்கப் படவில்லை. அதனால் தான் இப்போது கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை இதில் எப்படிக் கேட்க முடியும்? தயவு செய்து உட்காருங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

சோன நதியின் குறுக்கே பாலம்

*763 வினா—திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் உள்ள மணலூர்பேட்டையி லிருந்து மேலந்தல் செல்லும் வழியில் உள்ள சோன நதியின் குறுக்கே கரும்பு செஸ் நிதியிலிருந்து சிறுபாலம் அமைக்கும் திட் டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?